**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-4** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியசாமி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் 4.50 மணி

(1 ம் எதிரி சக்திவேல், 2 ம் எதிரி ரஞ்சித்குமார், 3 ம் எதிரி செல்வகுமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை

செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்டம், குப்பம் கிராமம், காருடையாம்பாளையம், காளிபாளையத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்துபோன ஜெகநாதன் என் பக்கத்து தோட்டக்காரர் ஆவார். எங்கள் இருவர் தோட்டத்திற்கு அருகில் அன்னை கிரசர் என்ற கல்குவாரி நடத்தி வருகிறார்கள், அதன் உரிமையாளர் செல்வகுமார். சம்பவம் நடப்பதற்கு முன்பு மூன்று ஆண்டுகள் முன்பு 2019 ஆம் ஆண்டு ஜெகநாதனுக்கும், செல்வகுமாருக்கும் வாய்தகராறு ஏற்பட்டு, அதன் பின்பு ஜெகநாதன் என் வீட்டிற்கு ஓடி வந்துவிட்டார். கேட்டை தூக்கி வெளியே எரிந்துவிட்டு 6 பேர்கள் வடமாநிலத்தவர். அந்த 6 வடமாநிலத்தவரும் செல்வகுமார் கல்குவாரியில் வேலை செய்பவர்கள். அவர்கள் ஜெயநாதனை அடித்து போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். அதன் பிறகு நான் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து ரஜினிகாந்த் மருத்துவமனைக்கு ஜெகநாதனை சிகிச்சைக்காக அனுமதித்து, பிறகு மேல்சிகிச்சைக்காக ஜெகநாதனை கோவை கங்கா ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றோம். கங்கா மருத்துவமனையில் ஜெகநாதன் 30 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்.

ஜெகநாதன் இரண்டு மாத காலம் வீட்டில் இருந்தார். அதன் பிறகு நிலம் மாசாகிறது என செல்வகுமாரிடம் கூறினார். மாசாகிவிட்டது என்று நானும், ஜெகநாதனும் சேர்ந்து செல்வகுமாரிடம் கூறினோம். அதற்கு செல்வகுமார் எந்த பதிலும் கூறவில்லை. அதன் பிறகு ஆகஸ்ட் 15 ஆம் தேதி 2022 வருடம் குப்பம் கிராம சபையில் கூட்டுவதற்கு நான் மனு கொடுத்தேன், என்னுடன் ஜெகநாதனும் இருந்தார். நான் தனியாக கொடுத்தேன். நான் கொடுத்த மனு இதுதான். அதில் என்னுடைய கையொப்பமும் உள்ளது. அது அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய கையொப்பத்துடன் கூடிய மனு இதுதான். அது அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிரசரை நிறுத்துவதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும், நீங்கள் கலெக்டருக்கும், கனிமவள துறைக்கும் மனு கொடுங்கள் என்று கிராம சபையில் எங்களிடம் கூறிவிட்டனர். அதன் பிறகு கலெக்டருக்கும், கனிமவளதுறைக்கும் நாங்கள் மனு போட்டோம். அவர்கள் எங்கள் மனுக்களை பரிசீலித்து 08.09.2022 அன்று மாலை 3 மணியளவில் கனிமவளதுறையில் இருந்து வந்து அன்னை கல்குவாரி கிரசரை சீல் வைத்தார்கள். அப்போது நானும், ஜெகநாதனும் அங்கு இருந்தோம். செல்வகுமார், ஜெகநாதனை பார்த்து நீ என்னைக்கு இருந்தாலும் கிரசரை நடத்துவதற்கு சிக்கலாய்தான் இருக்கிறாய். என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில்தான் என்று கொலை

மிரட்டல் விடுத்தார். 10.09.2022 ஆம் வருடம் மாலை 5 மணியளவில் வெட்டுக்காட்டுத்தோட்டத்தில் இருந்து காருடையாம்பாளையம் செல்வதற்கு ஜெகநாதனும், பொன்னுச்சாமியும் குப்பம் ரோட்டில் துாள் சண்முகம் காட்டிற்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது வடக்கிலிருந்து தெற்குநோக்கியும், துாள் சண்முகம் காட்டிற்கு அருகில் செல்லும்போது போலிரோ பிக்கப் வேன் வேகமாக வந்து ஜெகநாதன் வண்டிமீது மோதியது என்று பொன்னுச்சாமி எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். இப்படி அடித்து கொலை பண்ணிபுட்டார்கள் என்று பொன்னுச்சாமி எனக்கு போன் செய்தார். அதன்பிறகு நான் உடனடியாக அங்கு சென்று பிக்கப் வேன் கண்ணடி உடைந்த நிலையில், கண்ணாடியில் ரத்தக்கறையும், ஜெகநாதன் வண்டி தென்புறம் உள்ள டிச்சில் விழுந்துகிடந்தது. ஜெகநாதன் வேனின் வலதுபக்கம் கால், கை பிச்சு ரத்தக்கறையுடன் கொலை செய்யப்பட்டு துாள் சண்முகம் காட்டில் கிடந்தார். நான் போன பிற்பாடு மோகன்ராஜ் (அ.சா.3) அங்கு அரைமணிக்குள் வந்தார். சம்பவ தினத்தின்போது பார்த்த பிக்கப்வேன் புகைப்படம் இதுதான். அது அ.த.சா.ஆ.3 வரிசையாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்று ஜெகநாதன் பயன்படுத்திய இருசக்கர வாகனம் ஏற்கனவே அ.த.சா.ஆ.4 வரிசையாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஜெகநாதன் பிக்கப் வேனில் அடித்து கிடந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இதுதான். அது

அ.த.சா.ஆ.6 வரிசையாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு உறவினர்களுக்கு போன் செய்தோம். பின்னர் ஆம்புலன்ஸ் வந்து ஜெகநாதன் உடலை எடுத்து சென்றுவிட்டார்கள், ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்தார்கள் என்று தெரியாது. மோகனும், பொன்னுச்சாமியும் ஒரு இருசக்கர வாகனத்திலும், நான் ஒரு இருசக்கர வாகனத்திலும் கரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அன்று 7.00-7.15 மணி இருக்கும். சம்பவ இடத்திலேயே 6 மணிக்குதான் கிளம்பினோம். பவித்திரத்தில் பொன்னுச்சாமி வாந்தி எடுத்துவிட்டார். அதன் பிறகுதான் கரூர் மருத்துவமனைக்கு சென்றோம், நாங்கள் சென்றபோது ஜெகநாதன் பாடி வரவில்லை. நான்தான் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ஜெகநாதனின் பாடியை கொண்டு சென்றிருப்பார்கள் என்றும், நாம் அங்கு செல்லலாம் என்று கூறினேன். வேலாயுதம்பாளையம் சென்று பார்த்தோம், அங்கும் ஜெகநாதன் பாடி வரவில்லை என்று கூறினார்கள். மறுபடியும் கரூர் மருத்துவமனைக்கு சென்றோம். கரூர் மருத்துவமனைக்கு 9 மணிக்கு சென்றோம். அப்பேயே ஜெகநாதன் பாடி கொடுத்துவிட்டதாக கரூர் மருத்துவமனையில் கூறினார்கள். அதன் பிறகு நாங்கள் மூவரும் க.பரமத்தி காவல் நிலையம் சென்றோம். அங்கு புகார் அ.சா.1 ரேவதி கொடுத்தார். அன்னை புளூமெட்டல்ஸ் உரிமையாளர் செல்வகுமாரை எனக்கு அடையாளம் தெரியும். சாட்சி ஆஜர் 2 ஆம் எதிரி செல்வகுமாரை

பெயருடன் சரியாக அடையாளம் காண்பித்தார். காவல் துறையினர் இதுகுறித்து விசாரித்து எழுதிக்கொண்டனர்.

<u>**முடியும் நேரம் 5.25 மணி**</u>

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-3** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : மோகன்ராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் **4.10**

(1 ம் எதிரி சக்திவேல், 2 ம் எதிரி ரஞ்சித்குமார், 3 ம் எதிரி செல்வகுமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P. (MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்டம், காருடையாம்பாளையம் கிராமம், மாரப்பாளையம் கிராமத்தில் குடியிருக்கிறேன். அங்கு வீடும், தோட்டமும் உள்ளது. நான் பி.இ., கம்ப்யூட்டர் படித்துள்ளேன். நான் தனியார் கம்பெனியில் IT Eng., பணிபுரிகிறேன். சம்பவத்தில் இறந்த நபர் எனக்கு தாய்மாமா. அ.சா.1 ரேவதி ஜெகநாதன் மாமாவின் மனைவி ஆவார். 9-10 வருடங்களுக்கு மேலாக என் மாமாவும், மாமாவின் மனைவியும் தனித்தனியாக வசித்து வருகிறார்கள். என் மாமா ஜெகநாதன் காளிபாளையம் கிராமம், வெட்டுகாட்டுத்தோட்டத்தில் வசித்து வந்தார். என் மாமாவின் மனைவி அ.சா.1 ரேவதி அத்தையும், அவர்கள் பெற்றோர்கள் வீட்டில் ரேவதி அத்தையின் குழந்தையுடன் வசித்து வந்தார். ஜெகநாதன் வீட்டிற்கு அருகில் கிரசர் உள்ளது. அந்த கிரசரின் உரிமையாளர் செல்வகுமார். என் மாமா ஜெகநாதன் வெட்டுக்காட்டு தோட்டத்தில் விவசாயம் செய்து கொண்டு வந்தார். அவரது வாழ்வாதரமே விவசாயம் மட்டும்தான். கிரசருக்கு பக்கத்திலேயே இருந்ததால் புகை அடித்ததால் விவசாயம் என் மாமா ஜெகநாதன் அவர்களால் செய்ய இயலவில்லை. 2019 ஆம் வருடத்தில் என் மாமா ஜெகநாதன் சில இடங்களில் மனு கொடுத்தார். என் மாமா ஜெகநாதன் மனு கொடுத்ததால் பக்கத்தில் கிரசர் வைத்திருக்கும் செல்வகுமாரும், அந்த கிரசரில் வேலை செய்யும்

வேலையாட்களை 5, 6 நபர்களை விட்டு என் மாமா ஜெகநாதனை அடிக்க சென்றுள்ளார். அவ்வாறு பேசி வாய்தகராகி அடிக்க முற்படும்போது என் மாமா ஜெகநாதன் தோட்டத்திற்கு அருகில் பெரியசாமிக்கு வீட்டிற்கு சென்றுவிட்டார். தப்பித்து பெரியசாமி வீட்டிற்கு சென்று கதவை சாத்திக் கொண்டார். பெரியசாமி வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு வீட்டில் கவட்டை, கம்பி ஆகியவற்றால் என் மாமா ஜெகநாதனை தாக்கியுள்ளனர். அவருக்கு கை, கால் அனைத்து பகுதிகளிலும் பல எழும்புகள் முறிவு ஏற்பட்டு, ரத்தப்போக்கும் ஆனது. அதன் பிறகு என் மாமாவை கரூர் ரஜினிகாந்த் மருத்துவமனைக்கு அழைத்து வந்து, அங்கு சீரியஸ்யாக இருப்பதால் கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்படி கூறினார்கள். அங்கு 15-20 அல்லது 3 வாரம் கங்கா மருத்துவமனையில் என் மாமா ஜெகநாதன் சிகிச்சை பெற்றார். அதன் பிறகு என் மாமா அவர் வீட்டிற்கு வந்து 8 மாதம் முழுமையான படுக்கையில் ஓய்வு எடுத்தார். 1 வருடம் அல்லது 1 ½ வருடம் அந்த சம்பவத்திற்கு பிறகு அவருக்கு இயல்பாக நடக்க என் மாமாவிற்கு ஆனது. இது குறித்து காவல் நிலையத்தில் ஒரு முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. குற்ற எண்.106/2019 என பதியப்பட்டுள்ளது. கரூர், க.பரமத்தி காவல் நிலையத்தில் மேற்சொன்ன குற்ற எண் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு பிறகு என் மாமா ஜெகநாதன் திரும்பவும் விவசாயம் செய்தார், அவரால்

செய்ய இயலவில்லை. அதன் பிறகு குப்பம் கிராமத்தில் நடந்த கிராம சபையில் குவாரியினால் பாதிப்பு அதிகமாக உள்ளது என்றும், அதனை தடை செய்யவேண்டும் என்று பெரியசாமியும், என் மாமா ஜெகநாதனும் புகார் கொடுத்தார்கள். அந்த புகாரில் ஊர் பொதுமக்களிடமும் கையொப்பம் பெறப்பட்டிருந்தது. அதன்மேல் மேல்நடவடிக்கை எதுவும் இல்லாததால் என் மாமா Environment Engineer யிடம் பெட்டிசன் கொடுத்தார். அதன்மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் பிறகு 03.09.2022 ஆம் தேதியன்று முதலமைச்சருக்கும், அதன் கரூர் மாவட்ட ஆட்சியருக்கும் பதிவு தபால் மூலம் புகார் மனுக்கள் என் மாமா ஜெகநாதன் அனுப்பினார். அந்த பெட்டிசன் கொடுத்தவுடன் 08.09.2022 ஆம் தேதியன்று கலெக்டர் அலுவலகத்தில் இருந்து செல்வகுமாரின் அன்னை புளூமெட்டல்ஸ் என்ற குவாரிக்கு சீல் வைத்தனர். அடுத்த நாள் 09.09.2022 அன்று என் மாமா ஜெகநாதனை கொங்கு மெஸ்சில் வைத்து சந்தித்தேன். அப்போது என் மாமா ஜெகநாதன் என்னிடம் குவாரிக்கு சீல் வைக்கும்போது நான் அங்குதான் இருந்தேன், அப்போது செல்வகுமார் என் மாமாவை பார்த்து நீ இருக்கும் வரை என்னால் குவாரி நடத்த இயலாது. என்னைக்கு இருந்தாலும் உன்னுடைய சாவு என் கையில்தான் என்று கொலை மிரட்டல் செல்வகுமார் விட்டதாக என் மாமா ஜெகநாதன் கூறினார். அந்த சமயத்தில் ஜெகநாதன் மாமாவுடன் பெரியசாமியும்

இருந்துள்ளார் என்ற தகவலை கூறினார். என் மாமா எனக்கு பயமாக உள்ளது என்று என்னிடம் கூறியதற்கு நீங்கள் தைரியமாக இருங்கள் எதற்கும் பயப்படாதீர்கள், நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னேன். 10.09.2022 ஆம் தேதியன்று மாலை 5.30 மணிக்கு நான் வீட்டில் உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருந்தபோது பொன்னுச்சாமி (அ.சா.2) என்பவர் எனக்கு போன் செய்தார். துாள் சண்முகம் காட்டுப்பக்கத்தில் உன் மாமா ஜெகநாதனை அடித்து கொன்று இழுத்து சென்றுள்ளார்கள் என்று கூறினார். செல்வகுமாருக்கு சொந்தமான குவாரிக்கு சொந்தமான பொலிரோ பிக்கப் வாகனத்தினை வைத்து அடித்து கொன்றுவிட்டதாக கூறினார். என் மாமா வண்டியின் வாகன எண்.3133 Honda Fashion என்ற இருசக்கர வாகனமாகும். சம்பவயிடமான துாள் சண்முகம் காட்டிற்கு என்னை வரச்சொன்னார். நான் சம்பவயிடமான துாள் சண்முகம் காட்டிற்கு சென்றேன். நான் சம்பவயிடம் சென்று பார்த்தபோது பொலிரோ பிக்கப் டயர் மார்க்கும், சாலையின் வலதுபக்கம் ஏறி குறைந்தது சுமார் 50 அடிக்கு மேல் பொலிரோ பிக்கப்பின் தாரை தென்பட்டது. என் மாமாவை ஜெகநாதனை பார்க்க சென்றபோது அவர் பொலிரோ பிக்கப் இரண்டு சக்கரத்தின் நடுவில் கிடந்தார். அப்போது ஜெகநாதன் மாமாவின் இடதுகால் பிய்ந்து இருந்தது. வலதுபக்க தொடையில் பெரிய ஒரு காயம் என் மாமா ஜெகநாதனுக்கு இருந்தது. என் மாமாவின் தொடைக்கு கீழ்

இரண்டு, மூன்று இடத்தில் கிழிந்த காயங்கள் இருந்தது. என் மாமாவின் இடுப்பிற்கு கீழ் ரொம்ப சிதைந்து கிடந்தது. அதனை பார்த்தவுடன் நான் ரொம்ப பதட்டமாகிவிட்டேன். நான் சொந்தகாரர்கள் அனைவருக்கும் இது குறித்து தகவல் கொடுத்தேன். நான் ஒரு புகைப்படமும் எடுத்தேன். நான் எடுத்த புகைப்படத்தை காவல் துறையினரிடம் கொடுத்தேன். நான் என் போனில் போட்டோ எடுத்து அதனை ஒரு பிரிண்ட் எடுத்து காவல் துறையினரிடம் கொடுத்தேன். போட்டோக்கள் நான்கு எடுத்தேன். எனது வீட்டில் உள்ள பிரிண்டிரில் பிரிண்ட் எடுத்தேன். அன்று சம்பவத்திற்கு பிறகு என் மாமா ஜெகநாதன் இறந்து கிடந்தததை எடுத்த புகைப்படங்கள் நான்கு இதுதான். அது அ.த.சா.ஆ.6 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. நான்கு புகைப்படங்கள் எடுத்ததற்காக 65 பி சான்றிதழ் நான் வழங்கியுள்ளேன். அதில் உள்ள கையொப்பம் இதுதான். அது அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 65 பி சான்றிதழ் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் என் சொந்தக்காரர்களுக்கு போன் செய்து கொண்டிருந்தேன், அந்த சமயத்தில் ஒரு ஆம்புலன்ஸ் வந்தது, அந்த ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது. அப்போது அங்கு வந்த ஆம்புலன்ஸ்காரர்கள் என் மாமா ஜெகநாதன் உடலை எடுத்து சென்றார்கள். ஆம்புலன்ஸ் டிரைவர் என் மாமாவின் உடலை ஆம்புலன்சில் வைத்தவுடன் அவர்

கிளம்பி சென்றுவிட்டார். ஆம்புலன்சில் சென்ற என் மாமாவின் உடலுடன் யாராவது சென்றார்களா என்று நான் அங்குள்ளவர்களை கேட்டேன், அங்கு யாரும் செல்லவில்லை என்று தெரிந்துகொண்டதால் நானும், பொன்னுச்சாமியும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றோம். பெரியசாமி மற்றொரு வாகனத்தில் வந்தார். நாங்கள் அனைவரும் கரூர் அரசு மருத்துவமனைக்கு முதலில் சென்றோம். அங்கு போகும்போது இருட்டிவிட்டது. நான் மணியை கவனிக்கவில்லை. நாங்கள் செல்லும்போது பொன்னுச்சாமி என்மேல் வாந்தி எடுத்துவிட்டார். அதனால் நான் வாந்தியை தண்ணீர் எடுத்து கழுவிட்டு அங்கிருந்த டீ கடையில் நாங்கள் டீ குடித்துவிட்டு, பிறகுதான் கரூர் அரசு மருத்துவமனைக்கு நாங்கள் சென்றோம். கரூர் அரசு மருத்துவமனையில் என் மாமாவின் உடல் வரவில்லை என்று சொன்னார்கள். பெரியசாமி ஒரு வேலை வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு என் மாமா ஜெயநாதன் உடலை எடுத்து சென்றிருப்பார்கள் என்று கூறினார். நாங்கள் மூவரும் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கும் என் மாமா ஜெகநாதன் உடல் வரவில்லை. அதன் பிறகு கரூர் அரசு மருத்துவமனைக்கு அன்று இரவு 9 மணிக்கு வந்தோம். அங்கு G.H. நாங்கள் சென்றவுடன் என் மாமாவின் உடல் பிணக்கிடங்கிற்கு சென்றுவிட்டதாக கூறினார்கள். சில பேர்கள் காவல் நிலையம் சென்றார்கள்.

சொந்தகாரர்களுக்கு போன் செய்து காவல் நிலையம் வரச்சொன்னோம். க.பரமத்தி காவல் நிலையத்திற்கு நாங்கள் சென்றோம். அ.சா.1 ரேவதி புகார் கொடுத்தார். புகாரில் உள்ள சங்கதிகளை அ.சா.2 பொன்னுச்சாமி கூறினார். அங்கு காவல் நிலையத்தில் உள்ள ஒரு சின்னப்பையன் புகாரினை எழுதினார். ரேவதி (அ.சா.1) அத்தையுடன் நான் பேசுவேன். காவல் துறையினர் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள். ஒரு முறை கரூர் மருத்துவமனையில் ஒருநாள் விசாரித்தார்கள், அதன் பிறகு வெட்டுகாட்டுத்தோட்டத்தில் வைத்து காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள். கல்குவாரி உரிமையாளரை எனக்கு தெரியும், அவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். சாட்சி 2 ஆம் எதிரி செல்வகுமாரை பெயருடன் சரியாக அடையாளம் காண்பித்தார். என் மாமாமீது மோதிய வாகனத்தின் அடையாளமும், என் மாமாவின் இருசக்கர வாகனத்தினையும் என்னால் அடையாளம் காட்ட முடியும். சா.பொ.5 வாகனம் அன்று என் மாமா மீது மோதிய வாகனமாகும். என் மாமாவிற்கு சொந்தமான இருசக்கர வாகனம் ஏற்கனவே சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த பொலிரோ வாகனம் ஏற்கனவே சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ சமயத்தில் என் மாமா ஜெகநாதன் வெள்ளை நிற சட்டையும், நில நிற லுங்கியும் கட்டியிருந்தார், அவை ஏற்கனவே சா.பொ.1 சட்டை மற்றும் சா.பொ.3 லுங்கி ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரண்டு சா.பொ.1 மற்றும் சா.பொ.3 ரத்தக்கரையுடன்தான் இருந்தது.

**(நீதிமன்ற குறிப்பு சாட்சி மூலம் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் எதிரிகள் மூவருக்கும் இன்று வழங்கப்பட்டது.)**

<u>முடியும் நேரம் 4.50 மணி</u>

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-2** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பொன்னுச்சாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் **12.50**

(1 ம் எதிரி சக்திவேல், 2 ம் எதிரி ரஞ்சித்குமார், 3 ம் எதிரி செல்வகுமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P. (MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

சாலிபாளையம், குப்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்துபோனவர் ஜெகநாதன் என் உறவினர் ஆவார். அ.சா.1 ரேவதி ஜெகநாதனின் மனைவி ஆவார். ஜெகநாதன் மற்றும் ரேவதிக்கு இரண்டு மகன்கள். என் தகப்பனார் பெயர் குப்புச்சாமி. ரேவதியும், ஜெகநாதனும் தனித்தனியே வசித்து வந்தார்கள். ரேவதி அவர் தாயார் வீட்டில் குடியிருந்தார். ஜெகநாதன் காளிபாளையம், வெட்டுக்காட்டுத்தோட்டத்தில் குடியிருந்தார். ஜெகநாதன் விவசாயம் செய்து வந்தார். ஜெகநாதனுக்கு 8-9 ஏக்கர் விவசாய நிலம் இருக்கும். அவர் குடியிருந்த ஊரில்தான் தோட்டத்துடன் வீடு இருந்தது. ஜெகநாதனின் வீட்டு தோட்டத்திற்கு அருகே அன்னை புளூமெட்டல்ஸ் என்ற கல்குமாரி உள்ளது. அதன் உரிமையாளர் பெயர் செல்வகுமார். செல்வகுமாரை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும். 2 ஆம் எதிரி பெயருடன் சரியாக அடையாளம் காண்பித்தார். ஆஜர் எதிரி செல்வகுமாருக்கும், ஜெகநாதனுக்கும் முன்விரோதம் இருந்தது. செல்வகுமார் கிரசர் நடத்தி வருவதால் ஆடு, மாடுகள் மேய்ப்பதற்கு இடையூறாகவும், புகையாகவும் விவசாயம் பாதித்ததால் அவர்களுக்கு இடையே பிரச்சனை இருந்தது, இது குறித்து அவர் கிரசரை நிறுத்தச்சொல்லி மனு போட்டிருந்தார். அதனால் செல்வகுமாரும், கிரசரில்

உள்ள ஆட்களும் ஜெகநாதனை அடித்து கை, கால்களை உடைத்துவிட்டார். இது நடந்த வருடம் 2019 ஆகும். அதன்பிறகு அவர் கோயமுத்தூருக்கு சென்று அங்கு 20 நாட்கள் வைத்தியம் பார்த்துவிட்டு மீண்டும் வீட்டிற்கு வந்து வீட்டில் எட்டு மாதம் கிடையாக (படுத்துகிடந்தார்) அதன் பிறகு ஜெகநாதன் எழுந்து நடக்க ஆரம்பித்தார். மீண்டும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி குப்பம் கிராமத்தில் கிராம சபை கூட்டத்தில் புகை அடிக்கிறது என்று மனு கொடுத்துள்ளார் என்று நான் கேள்விப்பட்டேன். அதன் பிறகு கலெக்டர் அலுவலகம் சென்று பார்க்க கூறிவிட்டார்கள். 08.09.2022 ஆம் தேதியன்று கிரசரை கலெக்டர் அலுவலகத்தில் இருந்து வந்து சீல் வைத்துவிட்டார்கள். 09.09.2022 அன்று அதாவது சீல் வைத்த மறுநாள் நானும், ஜெகநாதனும் மாலை காருடையாம்பாளையத்திற்கு சென்றோம். அவர் ஒரு வண்டியில் முன்னால் சென்றார், அவருக்கு பின்னால் நான் சென்றேன். தூள் சண்முகம் என்பவரது தோட்டத்திற்கு சென்றோம். நாங்கள் இருவரும் வடக்கிலிருந்து தெற்குநோக்கி சென்றோம். Honda Shine இருசக்கர வாகனத்தில் அவர் சென்றார். நான் XL வண்டியில் சென்றேன். எனக்கும், ஜெகநாதன் வாகனத்திற்கும் சுமார் 50 அடி தூரம் இருக்கும். ஜெகநாதன் முன்னாடி சென்றார், அவருக்கு பின்னால் நான் சென்றேன். தெற்கிலிருந்து வடக்குநோக்கி ரொம்ப வேகமாக பிக்கப் வண்டி அன்னை புளூமெட்டல்ஸ் செல்வகுமாருக்கு சொந்தமான வண்டி. வேகமாக வந்த வண்டியை

பார்த்தவுடன் ஜெகநாதன் ஓரங்கட்டி நின்றுவிட்டார். தெற்கே இருந்து வந்த வண்டி வளைந்து வந்து ஜெகநாதன் மேல் மோதியது. வளைத்து அடித்து ஜெகநாதனை தூக்கி அடித்துவிட்டது. இருசக்கர வாகனம் டிச்சில் மாட்டிக்கொண்டது. ஜெகநாதன் வண்டி பனேட்மேல் சிக்கிக்கொண்டார். வண்டி நின்று அதன்பிறகு மீண்டும் வண்டியை இயக்கி ஆறு, ஏழு வேலிக்கற்களால் அடித்து வந்து தூள் சண்முகம் காட்டிற்குள் ஜெகநாதன் குப்புற விழுந்துவிட்டார். தூள் சண்முகம் காட்டில் ஜெகநாதன் விழுந்த பிறகு மீண்டும் வண்டியை இயக்கி ஜெகநாதன்மேல் ஏற்றிச்சென்று சிறிது தூரம் பிக்கப் வண்டியை இயக்கினார்கள். மீண்டும் வண்டியை அவர்கள் இயக்கத்திற்குட்பட்டபோது நான் அவர்கள் வண்டியை இயக்கவிடாமல் தடுத்தேன், வண்டியில் வந்த இருவர் கிழக்கே பார்த்து ஓடிவிட்டார்கள். பிக்கப் வண்டியில் வந்த இரண்டு நபர்களை நான் பார்த்தேன். அந்த இரண்டு நபர்களும் அன்னை புளூமெட்டல்ஸ் கம்பெனியில் வேலை செய்யும் நபர்கள். பிக்கப் வண்டியை ஓட்டி வந்தவர் சக்திவேல். அவருடன் வந்த மற்றொரு நபர் ரஞ்சித்குமார். அவர்கள் இருவரையும் என்னால் அடையாளம் காட்ட இயலும். ஆஜர் எதிரிகளான ரஞ்சித்குமார் மற்றும் சக்திவேலை பெயருடன் சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். அன்று ஆஜர் எதிரிகள் ஓட்டிவந்த பிக்கப் வாகனம் இந்த புகைப்படத்தில் காட்டப்படுவதுதான். அந்த பிக்கப் வாகனம் புகைப்படம் (3 வரிசை)

அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஜெகநாதன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் புகைப்படம் இதுதான். இருசக்கர வாகனத்தின் புகைப்படம் (3 வரிசை) அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தன்று ஜெகநாதன் வெள்ளை சட்டை, வெள்ளைநிற முண்டா பனியன், நீல நிற லுங்கி அணிந்திருந்தார், என்னால் அதை அடையாளம் காட்ட முடியும். அது சா.பொ.1 முதல் சா.பொ.3 வரை குறியீடு செய்யப்படுகிறது. அன்னை புளூமெட்டல்ஸ்காரர்கள் மாமனை அடித்து கொன்றுவிட்டார்கள் என்று பெரியசாமியிடம் கூறினேன். அதன்பிறகு ஜெகநாதன் அக்கா மகன் மோகன்ராஜ்க்கு போன் செய்து என் மாமாவை அடித்து புளூமெட்டல்ஸ்காரர்கள் கொன்றுவிட்டார்கள் என்று தகவல் சொன்னேன். பெரிசாமி ஐந்து நிமிடத்தில் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார். அதன்பிறகு அரைமணி கழித்து சம்பவயிடம் வந்தார். சம்பவம் நடந்தது 5 மணியிலிருந்து 5.15 மணிக்குள் இருக்கும். ஜெகநாதன் கால் பிழுந்து கிடந்து, ரத்தக்காயங்களுடன் சிதறிக்கிடந்தார். ஜெகநாதன் வண்டி ரொம்ப நொருங்கிபோய்விட்டது. பிக்கப் வண்டி வலதுபக்கம் பாநெட்டில் ரத்தம் பரவலாக இருந்தது. நான் என் மாமா மற்றும் மற்ற சொந்த பந்தங்களுக்கு போன் செய்தேன். ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அப்போது ஆம்புலன்ஸ் அங்கு வந்தது. அந்கிருந்த ஜெகநாதன் பாடியை எடுத்துகொண்டு ஆம்புலன்ஸ்

கிளம்பிவிட்டது. அதற்கு பின்னர் ஆம்புலன்ஸ் சென்றுவிட்டதால் நாங்கள் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நானும், மோகன்ராஜ் ஒரு வண்டியிலும், பெரியசாமி வேறொரு வண்டியிலும் வந்தார். கரூர் அரசு மருத்துவமனைக்கு. சென்றோம். அப்போது 7 மணி இருக்கும். மோகன்ராஜ் மேல் நான் வாந்தி எடுத்துவிட்டேன், அப்போது இறங்கி நின்று டீ குடித்துவிட்டு அதன்பிறகுதான் கரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது ஜெகநாதன் பாடி வரவில்லை. அதன் பிறகு நாங்கள் மூவரும் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ஜெகநாதன் பாடியை கொண்டு சென்றிருப்பார்கள் என்று அங்கு சென்று பார்த்தோம். அங்கு ஜெகநாதன் பாடி இல்லை. அதன் பிறகு மீண்டும் கரூர் அரசு மருத்துவமனைக்கு. வந்தோம். அங்கு ஜெகநாதன் பாடியை இறக்கி வைத்திருந்தார்கள். நாங்கள் செல்லும்போது இரவு 9 மணி இருக்கும். அதன் பிறகு நான், மோகன்ராஜ், பெரியசாமி ஆகிய மூவரும் க.பரமத்தி காவல் நிலையம் சென்றோம். அப்போது ரேவதியை க.பரமத்தி காவல் நிலையம் வரச்சொல்லியிருந்தோம். அங்கு புகாரை அ.சா.1 ரேவதி கொடுத்தார். ரேவதி புகார் கொடுப்பதற்கான சங்கதிகளை நான்தான் கூறினேன். அ.த.சா.ஆ.2 ல் உள்ள சங்கதிகள் நான் கூறியவாறுதான் உள்ளது. (சாட்சி அ.சா.2 யை பார்த்து சாட்சியம் அளித்தார்.) அ.த.சா.ஆ.2 யை ஒரு பையன் எழுதிக்கொடுத்தார். அவர்

பெயர் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் இது குறித்து என்னை இரண்டு முறை விசாரித்தார்கள்.

**<u>முடியும் நேரம் 1.30 மணி</u>**

மதிய உணவு இளைவேலைக்கு பின்னர் குறுக்கு விசாரணை தொடரும்.

**<u>ஆரம்பிக்கும் நேரம் 3.55</u>**

அன்று ஜெகநாதன் பயன்படுத்திய இருசக்கர வாகனம் இதுதான். அது சா.பொ.4 (பதிவு எண்.TN-47-AV-3133) ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்று ஜெகநாதனை கொலை செய்ய பயன்படுத்திய பிக்கப் வாகனம் இதுதான். அது சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.பொ.5 ன் பதிவு எண்ணை கொண்டு சாட்சியம் அடையாளம் காண்பித்தார். (பதிவு எண்-TN-47-BY-2877.). கொலைக்கு பின்பு சா.பொ.5 யை FC செய்தும், செய்யாமலும் வாகனம் உள்ளது என சாட்சி கூறினார். (அவர் வாகனத்தின் பதிவு எண்ணை கொண்டு வாகனத்தினை அடையாளம் காண்பித்ததாக கூறினார்.)

(வாகனம் நீதிமன்ற குறிப்பு வாகனம் முன்கிரில் இல்லாமலும், முகப்பு கண்ணாடி இல்லாமலும், பழுதுபார்க்கப்பட்டும், பெயிண்ட் அடிக்கப்பட்டும் புதிய வாகனம் இருந்தது. 2 ஆம் எதிரியின் செல்வகுமாரியின் தாயார் வாகனத்தை மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்திரவின்படி

பெற்றுச்சென்றுள்ளார். அவ்வாறு பெறுவதற்கு முன்பாக நீதிமன்றத்திலிருந்து வாகனத்தை புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.)

புகைப்படங்களைப் பார்த்து சாட்சி சம்பவத்தின்போது பயன்படுத்திய வாகனம் ஒன்றை அடையாளம் காண்பித்தார். அந்த புகைப்படங்கள் நான்கு (4 வரிசையாகும்). அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பட்டியல் சாட்சி 3 மற்றும் 4 இந்த சாட்சியுடன் ஒத்து சாட்சியம் அளிப்பதால் முதல் விசாரணைக்கு பிறகு மீதி இரண்டு விசாரணையும் விசாரிப்பதாக கூறியதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடியும் நேரம் **4.10**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-1** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ரேவதி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் **12.00** மணி

(1 ம் எதிரி சக்திவேல், 2 ம் எதிரி ரஞ்சித்குமார், 3 ம் எதிரி செல்வகுமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P. (MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

வாங்கல் அருகில் உள்ள மாரிக்கவுண்டம்பாளையத்தில் குடியிருக்கிறேன். சம்பவத்தில் இறந்துபோனவர் என் கணவர் ஆவார். எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள். பெரியவர் பெயர் அபிஷேக், சிறியவர் பெயர் தரணிபிரியன் ஆகிய இரண்டு குழந்தைகள். குடும்ப பிரச்சனை காரணமாக நானும், என் கணவரும் 9 வருடங்களாக பிரிந்திருந்தோம். குழந்தைகள் என்னுடன்தான் இருந்தார்கள். வெட்டுகாட்டுத்தோட்டம், காளிபாளையத்தில் என் கணவர் வசித்து வருகிறார். என் கணவர் விவசாய வேலை செய்கிறார். என் கணவர் வசித்து வரும் இடத்திற்கு அருகே அன்னை புளூமெட்டல்ஸ் என்ற குவாரி உள்ளது. என் கணவருக்கும், அன்னை புளூமெட்டல்ஸ் பிரச்சனை என்று கேள்விபட்டேன். அதற்கு முன்பாகவே என் கணவருக்கும், அன்னை புளூமெட்டல்ஸ் உரிமையாளருக்கும் பிரச்சனை என்று கேள்விபட்டேன். அன்னை புளூமெட்டல்ஸ் உரிமையாளர் செல்வகுமார், அவரை என்னால் அடையாளம் காட்ட இயலும். அன்னை புளூமெட்டல்ஸ் உரிமையாளருக்கும், செல்வகுமாருக்கும், உரிமம் இல்லாமல் கல்குவாரி நடத்துவதால் என் கணவருக்கும் அவருக்கும் பிரச்சனை என்று தெரிந்துகொண்டேன். பொலிரோ பிக்கப் ஜீப் மோதி என் கணவர் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன். இந்த தகவலை என் கணவரின்

அக்கா மகன் மோகன்ராஜ் என் கணவர் இறந்த விபரத்தை சொன்னார். ஜீப் மோதி இறந்துவிட்டார் என்று கூறினார். நான் காவல் நிலையம் சென்ற பிறகுதான் விபரம் தெரியவந்தது. காவல் நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய கையொப்பத்துடன் கூடிய அந்த புகார் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் துறை அன்றைய தினம் என்னை விசாரித்தார்கள். புகார் கொடுத்த தினத்தன்று விசாரித்தார்கள். சாட்சி எதிரி செல்வகுமாரை பெயருடன் சரியாக அடையாளம் காண்பித்தார்.

**<u>1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>(திரு.மாரியப்பன், வழக்கறிஞர்)</u>**

நீங்கள் மருத்துவமனைக்கு உங்கள் கணவரை பார்க்க சென்றபோது அங்கு உங்களுக்கு தகவல் கொடுத்த மோகன், பொன்னுச்சாமி, பெரியசாமி, குணசேகரன் மற்றும் கல்குவாரி எதிர்ப்பு இயக்கத்தினர் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை, மறுநாள் காலையில்தான் மேற்சொன்ன நபர்களை பார்த்தேன், காவல்நிலையம் சென்றபோது பார்த்தேன். மோகன் போன் செய்தவுடன் அன்று இரவு நீங்கள் மருத்துவமனைக்கு. சென்றீர்களா என்றால் இல்லை. மேற்சொன்ன நபர்களுடன் சம்பவ நடந்த இடத்திற்கு

சென்று பார்த்துவிட்டு அங்கிருந்து காவல் நிலையம் சென்றோம். நீங்கள் சம்பவயிடத்திற்கும் செல்லும்போதும், காவல் நிலையம் செல்லும்போது உங்களுடன் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் 10-15 நபர்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். மேற்படி சொன்ன நபர்கள் கூறியதன் அடிப்படையில்தான் நீங்கள் புகார் எழுதியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

**2 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**(திரு.இளையராஜா, மூத்த வழக்கறிஞர்)**

நீங்கள் 10.09.2022 ஆம் தேதியன்று எங்கு இருந்தீர்கள் என்றால் என் அம்மா வீட்டில் இருந்தேன். மோகன்ராஜ் என்பவருக்கும், உங்களுக்கும் பேச்சுவார்த்தை உண்டு என்று சொன்னால் சரிதான், என்றாவது ஒருநாள்தான் பேசுவேன், முக்கியமான தகவலுக்காக பேசுவேன். மோகன்ராஜ் என்னை மாலை 4.30-5.00 என்று சரியாக எனக்கு ஞாபகம் இல்லை, என் மகன் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்தபிறகு அவனை டியுசன் அழைத்துச்செல்லும்போது பேசுவேன். என் மகனின் பள்ளிக்கூடம் 4.30 மணிக்கு முடியும், அதற்கு பின்னர் என் வீட்டிற்கு வருவார். என் மகன் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்து டீ குடித்துவிட்டு டியுசன் செல்லும்போதுதான் வாங்கல்கிட்ட சென்றுகொண்டிருந்தபோது மோகன்ராஜ் என்பவரிடம் இருந்து போன் வந்தது. மோகன்ராஜ்

என்பவரிடம் இரண்டு நிமிடம் பேசினார். இரண்டு நிமிடமும் மோகன்ராஜ் பேசினார். மோகன்ராஜ் நெம்பர் செல்லில் பதிவு செய்துள்ளேன். மாரிக்கவுண்டம்பாளையத்தில் இருந்து சம்பவயிடம் 30-35 கி.மீ. இருக்கும். சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டவுடன் நான், என் அம்மா, அப்பா, பக்கத்து வீட்டில் உள்ள இரண்டு பசன்கள் ஆகியோர்கள் சம்பவயிடத்திற்கு சென்றோம். காரில் சென்றோம். என் தம்பியின் காரில் சென்றோம். என் தம்பி காரை ஓட்டவில்லை, பக்கத்து வீட்டு தம்பிதான் ஓட்டினார். என் வீட்டில் இருந்து சம்பவயிடம் செல்வதற்கு முக்கால் மணி நேரம் ஆகும். சம்பவயிடத்திற்கு நாங்கள் செல்லும்போது கொஞ்சம் இருட்டாகிவிட்டது. நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லும்போது சம்பவயிடத்தில் மோகன்ராஜ் மற்றும் 20-25 நபர்கள் இருந்திருப்பார்கள். காவல் துறையினர் சம்பவயிடத்திற்கு வந்தார்களா என்றால் இருந்தார்கள் என்று நினைக்கிறேன், சரியாக ஞாபகம் இல்லை. சம்பவயிடத்தில் இருந்து காவல் நிலையம் செல்வதற்கு முன்பாக கால்மணிநேரம், அரைமணிநேரம் சம்பவயிடத்தில் இருந்தோம். எதிரி ஜீப் ஏற்றி கொன்றுவிட்டார் என்று அங்கிருந்த நபர்கள் கூறினார்கள். நாங்கள் வந்த காரில்தான் காவல் நிலையம் சென்றோம், மற்றவர்கள் எப்படி காவல் நிலையம் வந்தார்கள் என்று தெரியாது, ஆனால் அவர்கள் காவல் நிலையம் வந்துவிட்டார்கள். அங்கிருந்த மக்கள் அவர்களுக்கு தேவையான தகவல்களை கொடுத்து

நீங்கள் அதனை கேள்விப்பட்டு புகாராக கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

**<u>முடியும் நேரம் 12.50 மணி</u>**

**<u>3 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**(திரு.சந்திரன், வழக்கறிஞர்)**

இல்லை.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.